**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Nagarajan |
| Father's Name | : Segamani |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2019.

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1ம் எதிரிக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

**நான் கிராம நிர்வாக அதிகாரியின் உதவியாளர் ஆவேன். சம்பவதன்று கிராம நிர்வாக அலுவலர் பணியில் இல்லை. நான் செல்லும் போது எந்த ஆவணங்களையும் எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். தாசில்தார் தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில் போலீஸ்சார் சம்பவயிடத்திற்கு அழைத்து செல்லும் வரை எந்த இடத்திற்கு செல்கிறோம், எதற்காக செல்கிறோம் என்று தெரியாது என்றால் சரிதான். எனக்கு தாசில்தார் அவர்கள் 1.00 மணி அளவில் போன் செய்தார்கள். அவர் போன் செய்து 10 நிமிடம் கழித்து போலீஸ்சார் நான் வேலை செய்யும் அலுவலகத்திற்கு வந்தார்கள். சம்பவயிடத்திற்கு என்னுடைய அலுவலகத்திலிருந்து 10யிலிருந்து 15 நிமிடத்திற்குள் சென்றுயிருப்பேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நான் 1 மணி நேரம் இருந்து இருப்பேன் என்றால் சரிதான். என்னை அழைப்பதற்கு முன்பாகவே என்னுடன் கையெழுத்து செய்தவரை அவர்களுடன் அழைத்து வந்து இருந்தார்கள். 2013யிலிருந்து தற்போது வரை அதே சிட்லபாக்கம் கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக இருந்து வருகிறேன். நான் முதல் விசாரணையில் கால்வாய் செயல் அலுவலரால் போடப்பட்டது என்று கூறியுள்ளது எதன் அடிப்படையில் என்றால் அது யாரால் போடப்பட்டது என்று**

**எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் இந்த வழக்கில் மனை வரைப்படத்தில் அந்த இடத்தை ரோடாக குறிப்பிட்டுள்ளார்கள். இந்த விவரத்தினை போலீஸ்சாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் ஆனால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் என்னுடைய முதல் விசாரணையில் நடராஜன் என்பவர் அந்த இடத்தில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார். அங்கு போடப்பட்ட கால்வாயின் சதுர அடி சுமார் 1000 சதுர அடி ஆகும் என்று கூறிய விவரத்தினை போலீஸ்சாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் ஆனால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன இடத்திற்கு செல்லாமல் அதிகாரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Sd. (xxxx)

Typewritten to my dictation in open
court lead over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd. xxxxxxx
Judicial Magistrate No.I
Chengalpattu.

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு</u>**

**சிசி எண்- 88-2017 , அ.சா.3 -திரு.ராஜேந்திர பாபு த-பெ ஏகாம்பரம் 20.11.2019**

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>1ம் எதிரிக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

சம்பவதினதன்று செயல் அலுவலர் பணியில் தான் இருந்தார். நான் வருவதற்கு முன்பாகவே போலீஸ்சார் செயல் அலுவலருடன் பேசிக்கொண்டுயிருந்தார்கள். நான் வந்தவுடன் செயல் அலுவலர் போலிஸ்சாருடன் அனுப்பி வைத்தார். அவர் சொன்னவுடன் அலுவலகத்திலிருந்து போலீஸ்சாருடன் நான் சென்று விட்டேன். என்னுடைய அலுவகத்திலிருந்து நேராக சம்பவயிடத்திற்கு சென்றேன். இடையில் எங்கும் நானும் போலீஸ்சாரோ செல்லவில்லை. இந்த சம்பவதற்கு முன்பாக பிரச்சினைக்கு உண்டான வழக்கு குறித்து செயல் அலுவலர் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு செல்வார் அதனுடன் அவருடன் செல்வேன். தவா இடத்தின் அமைப்புகள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் பிரச்சினை உள்ளது என்று எனக்கு தெரியும் மற்ற விவரங்கள் செயல் அலுவலருக்கு தான் தெரியும். அந்த மனை பிரிவில் ஆக்கிரமிப்பு செய்து 1000 சதுர அடியானது ரோடு போடுவதற்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நான் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் போலீஸ் விசாரணையில் கூறாமல் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரோடுக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்பதற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் அலுவலகத்தில் ஆதாரம் உள்ளது. அந்த ஆவணங்கள் செயல் அலுவலரிடம் தான் இருக்கும். அந்த ஆவணங்களை பார்த்தால் தான் நான் செல்வது உண்மையா பொய்யா என்று தெரிய வரும் என்றால் சரிதான். தவா இடத்திற்கு எதிரே பூங்கா ஒன்று எங்கள் பேரூராட்சியால் பராமரித்து வரப்படுகிறது. இதனை நான் போலீஸ் விசாரணையின் போது கூறியுள்ளேன். என்னுடன் கையெழுத்து செய்த நாகராஜ் என்பவர் சம்பவயிடத்திற்க ஏ்பபோது வந்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்தில் இருக்கும் போது அசா2 யை நான் அவ்விடத்தில் பார்க்கவில்லை. சம்பவயிடத்திற்கு செல்லாமல் போலீஸ்சார் கேட்டுக்கொண்டதற்கு கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd. (xxxx)

Typewritten to my dictation in open court lead over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxxx
Judicial Magistrate No.I
Chengalpattu.